# கிறிஸ்தவம்(N.R.C)

# தரம் - 09

## இறை சமூகத்தில் நேர்மையாளர் - நோவா – அலகு 01

1) அழகிய உலகைப் படைத்தவர் யார்?
   இறைவன்
2) இறைவன் உலகைப் படைத்து யாரிடம் ஒப்படைத்தார்?
   மனிதரிடம்
3) இறைபடைப்பில் மிக உயர்ந்த படைப்பு எது?
   மனிதன்

**இடைவெளி நிரப்புக.**

4) மண்ணுலகில் பலுகிப் பெருகி 1…………………. நிரப்புங்கள்.அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் 2.………………… அனைத்தையும் ஆளுங்கள்.
   1.மண்ணுலகை 2.உயிர் வாழ்வன
5) இறையுறவில் இருந்து பிரிக்கப்பட்ட மனிதர் மத்தியில் நேர்மையாளராக காணப்பட்டவர் யார்?
   நோவா
6) நோவாவின் புதல்வர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
   சேம்,காம்,யாப்பேத்
7) நோவாவைப்பற்றி இறைவார்த்தையில் குறிப்பிடப்படும் விடயங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
   1.இறைவனுடன் நல்லுறவில் வாழ்ந்தவர் 2.ஆண்டவரின் அருள் பார்வை பெற்றவர்
8) இன்றைய சமூகம் தேடிச்செல்பவை யாவை?
   செல்வம்,அதிகாரம்,புகழ்
9) இறைபிள்ளைகளிடம் காணப்பட வேண்டிய நற்பண்புகள் யாவை?
   கீழ்ப்படிவு,தாழ்மை,இறைவிசுவாசம்
10) நோவாவின் நல்ல வாழ்வில் அவருக்கும் அவருடன் இருந்தவர்களுக்கும் கிடைத்தது என்ன?
   இறை கருணை

## இறை சமூகத்தில் நேர்மையாளர் - தாவீது – அலகு 02

1) இஸ்ரவேல் மக்களின் முதல் அரசன் யார்?
   சவுல்
2) தாவீது எந்தப்பாலைவனத்தில் சவுலை கொலை செய்யாது விட்டான்?
   ஏன்கேதிப்பாலைவனம்
3) தாவீது சவுலைக் கொலை செய்யாது என்ன செய்தார்?
   சவுலின் மேலங்கியின் முனையை அவருக்கு தெரியாமல் வெட்டினான்
4) சந்தர்ப்பம் கூறுக.
   1. "ஆண்டவர் திருப்பொழிவு செய்த என் தலைவருக்கு எத்தீங்கும் செய்யாதவாறு நான் அவர் மேல் கைவைக்க கூடாது"
      யாரால் - தாவீதால்
      யாருக்கு – அவருடைய ஆட்களுக்கு

5) சவுல் குகையை விட்டு வெளியேறிய போது “அரசே என் தலைவரே” என அழைத்தவர் யார்?

தாவீது

6) சவுல் எவ்வாறு கூறி உரத்த குரலில் அழுதார்?

“என் மகன் தாவீதே இது என் குரல்தானா”

7) சந்தர்ப்பம் கூறுக?

1. “நீ என்னிலும் நீதிமான்”

யாரால் - சவுலால்

யாருக்கு – தாவீதுக்கு

8) சவுல் தாவீதுக்கு எவ்வாறு ஆசி வழங்கினார்?

நானோ உனக்கு தீங்கு செய்தேன்.நீ எனக்கு நன்மை செய்திருக்கிறாய்

9) சவுல் அரசனின் மகன் பெயர் என்ன?

யோனத்தான்

10) சவுலுக்குப் பின் இஸ்ரவேலின் அரசனாக நியமிக்கப்பட்டவர் யார்?

தாவீது

11) யோனத்தானின் மகனின் பெயர் என்ன?

மெபிபொசேத்

12) தாவீதின் நேர்மை வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

1.ஏன்கேதியில் சவுலைக் கொலை செய்வதைத் தவிர்த்தல்

2.மெபிபொசேத்துக்கு கருணை காட்டல்

13) தாவீதிடம் காணப்பட்ட நற்பண்புகள் மூன்றினைத் தருக?

- இறைபயம்
- கீழ்ப்படிவு,
- பழிவாங்காமல் அன்பு செய்தல்

## விண்ணப்பம் நாளாந்த வாழ்வுக்கு - அலகு 03

1) தொடர்பாடலை இலகுபடுத்த நாம் இன்று பயன்படுத்துபவை யாவை?

   - கையடக்க தொலைபேசி
   - முகப்புத்தகம்
   - மின்னஞ்சல்

2) கிறிஸ்தவ வாழ்வில் மிக முக்கியமான ஊடகம் எது?

விண்ணப்பம்

3) இயேசு விண்ணப்பம் செய்த சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

1.தமது சீடர்களைத் தெரிவு செய்யும் முன்னர்

2.தமது பணியை ஆரம்பிக்கும் முன்னர்

4) இயேசு எமக்கு கற்பித்து தந்த ஜெபத்தில் காணப்படும் ஒன்றிப்புக்கள் இரண்டைக்குறிப்பிடுக?

1.எங்கள் குற்றங்களை மன்னியும் 2.எங்கள் அனுதின உணவு

5) யூதப்பிள்ளைகளின் மிக பழக்கப்பட்ட விழித்தல் யாது?

“எங்கள் தந்தையே”

6) தீயோனின் சோதனைக்கு உட்படுதல் என்பது யாது?
இறைவனிடமிருந்து விலகுதல்

7) இயேசு கற்பித்த இறை வேண்டலில் உள்ளடங்கும் மூன்று விடயங்களை குறிப்பிடுக?
1) இறை விருப்பத்தை நிறைவேற்றுதல்

2) இறை மன்னிப்பு, இறைபோசனை, இறைபாதுகாப்பு

3) இறை அன்புடன் வாழ்தல்

8) விசுவாசத்தின் ஆக்கியோன் யார்?
இறைவன்

9) இறைவனின் ஆட்சி எமது வாழ்வில் அனுபவிக்கப்பட வேண்டும் என்பதை உணர்த்தும் பரமண்டல ஜெபத்தின் வரிகளைக் குறிப்பிடுக?
"உமது ஆட்சி வருக"

10) எமது ஆயராக காணப்படுபவர் யார்?
இறைவன்

## இறைவனின் தீர்வு – அலகு 04

1) யூதர்கள் திருமணவிழாவை எத்தனை நாட்கள் கொண்டாடுவார்கள்?
ஏழு நாட்கள்

2) கலிலேயாவில் உள்ள கானாவூர் திருமண வீட்டிற்கு அழைப்பு பெற்றவர்கள் யாவர்?
இயேசுவும் அவருடைய சீடரும், அவருடைய தாயும்

3) கானாவூர் திருமணம் குறித்து எந்த நற்செய்தியில் கூறப்பட்டுள்ளது?
யோவான் நற்செய்தி

4) இயேசு செய்த முதல் அரும் அடையாளம் எது?
கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரை இரசமாக மாற்றியமை

5) திராட்சை இரசம் குறைவுபட்டதைக்குறித்து இயேசுவுக்கு கூறியவர் யார்?
இயேசுவின் தாய் மரியாள்

6) எத்தனை கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பினார்கள்?
ஆறு

7) கானாவூர் திருமணத்தில் இயேசுவால் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என விசுவாசித்தவர் யார்?
மரியாள்

8) சந்தர்ப்பம் கூறுக.
"அம்மா அதைப்பற்றி நாம் என்ன செய்ய முடியும் எனது நேரம் இன்னும் வரவில்லையே"
யாரால் - இயேசுவால்
யாருக்கு – மரியாளுக்கு

9) ஒரு கற்சாடி எத்தனை குடம் தண்ணீர் கொள்ளக் கூடியதாய் இருந்தது?
இரண்டு மூன்று குடம்

10) யூதர்களின் பாரம்பரியங்களில் ஒன்றாகக் காணப்பட்டது எது?
பாதங்களைக் கழுவுதல்

## இறை வல்லமையால் ஊட்டம் பெறுதல் – அலகு 05

1) இறைவாக்கினர் எலியா யார் யார் மூலமாக போசிக்கப்பட்டார்?
   சாரிபாத் விதவை,காகம்
2) நான்காயிரம் பேருக்கு உணவளித்த சந்தர்ப்பத்தில் அங்கு கூடியிருந்தவர்கள் இயேசுவின் போதனையை எத்தனை நாட்கள் கேட்டுக்கொண்டிருந்தனர்?
   மூன்று நாட்கள்
3) மக்களின் உடல் தேவையை அறிந்த இயேசு என்ன செய்தார்?
   1.கவலையடைந்தார்
   2.அவர்களின் உடல்தேவையை அறிந்து கொண்டார்
   3.கருணையுடன் அவர்களின் பிரச்சினைகளில் இடைப்பட்டார்.
4) எத்தனை அப்பங்களையும் மீன்களையும் கொண்டு நாலாயிரம் பேரைப் போசித்தார்?
   ஏழு அப்பமும் சில மீன்களும்
5) மிகுதியாய் இருந்த துண்டுகளை எத்தனை கூடை நிறைய எடுத்தார்கள்?
   ஏழு

## நம்பிக்கையில் குணம் - அலகு 06

1) அரச அலுவலகராகப் பணிபுரிந்தவர் யார்?
   அந்திபஸ் ஏரோது
2) அந்திபஸ் ஏரோதுவின் மகன் எந்த இடத்தில் நோயாளராகி இருந்தார்?
   கப்பர் நகூம்
3) இடைவெளி நிரப்புக.
   அடையாளங்களையும் ………………. கண்டாலன்றி நீங்கள் நம்பவே மாட்டீர்கள்.
   அருஞ்செயல்களையும்
4) நாங்கள் நோய்வாய்ப்படும் போது செய்ய வேண்டிய இரு விடயங்களைக் குறிப்பிடுக?
   1.இயேசுவில் நம்பிக்கை கொள்வோம்
   2.குணம் வேண்டி விண்ணப்பம் செய்தல்
5) சந்தர்ப்பம் கூறுக.
   1. “ஐயா என் மகன் இறக்கும் முன் வாரும்”
      யாரால் - அந்திபஸ் ஏரோதுவினால்
      யாருக்கு - இயேசுவுக்கு
   2. “நீர் புறப்பட்டுப் போகும் உம்மகன் பிழைத்துக் கொள்வான்”
      யாரால் - இயேசுவால்
      யாருக்கு - அந்திபஸ் ஏரோதுவிற்கு
   3. அந்திபஸ் ஏரோதுவின் மகனை குணப்படுத்திய சம்பவம் எத்தனையாவது அருள் அடையாளமாக கொள்ளப்படுகிறது?
      இரண்டாவது அருள் அடையாளம்
   4. கப்பர் நகூமிலிருந்து கானாவூர் எத்தனை மைல் தூரமுடையதாய் காணப்பட்டது?
      ஏறக்குறைய 20 மைல் தூரம்
   5. அரச அலுவலரிடமிருந்து வெளிப்படும் சிறப்பான பண்பு எது?
      இறை விசுவாசம்

## கருணையால் குணமடைதல் - அலகு 07

1. யூதர்கள் முக்கியமான நாளாக எதனைக் கருதினார்கள்?
   ஓய்வு நாள்
2. இயேசு ஓய்வு நாளில் செய்த அற்புதங்களில் ஒன்றைக் குறிப்பிடுக?
   கை சூம்பியவர் குணமடைதல்
3. இயேசு தொழுகைக் கூடத்துக்குள் சென்ற போது மக்கள் அவரைக் கூர்ந்து நோக்கியமைக்கான காரணம் யாது?
   1.அவர் மீது குற்றம் சுமத்தும் நோக்குடன்
   2.ஓய்வு நாளில் கை சூம்பியவரை குணப்படுத்துவாரா என்ற நோக்குடன்
4. ஓய்வு நாளில் ஏதாவது செயல்களில் ஈடுபடுதல் தண்டனைக்குரியதான குற்றமாக கருதியவர்கள் யாவர்?
   யூதர்கள்
5. இங்கு இச்சம்பவத்தில் இயேசு எமக்கு வெளிப்படுத்தியது என்ன?
   சமூகத்தில் ஏற்படும் தீமையான பிரதி நடத்தைகளைக் கண்டு பின்னடையாது இருக்க வேண்டும்.
6. ஓய்வு நாளைக் குறித்த இயேசுவின் கருத்து யாது?
   ஓய்வு நாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது, மனிதர் ஓய்வு நாளுக்காக அல்ல
7. யூத மக்களுக்கு ஆன்மீக வளர்ச்சிக்குத் தேவையானவைகள் எங்கு வழங்கப்பட்டது?
   தொழுகைக் கூடங்களில்
8. பழைய ஏற்பாட்டில் காணப்படும் முதல் 05 நூல்களும் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
   பஞ்சாகமங்கள்
9. இயேசு தொழுகைக்கூடத்திற்கு சென்றமை பற்றி எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?
   நற்செய்தி நூல்களில்

## தூய ஆவியின் வல்லமை பெற்ற தொடக்க திருச்சபை – அலகு 08

1. கிறிஸ்துவின் பணிக்காக எம்மை ஒப்புவிக்கையில் இயேசு எமக்கு அளிப்பதாக உறுதியளித்துள்ள 03 விடயம்?
   - வழிகாட்டல்
   - வல்லமை
   - பலம்
2. இயேசு எம்மிடம் யார் மூலம் செயற்பட்டு வருகின்றார்?
   தூய ஆவியின் மூலம்
3. உயிர்த்த கிறிஸ்து விண்ணேற்றம் அடையும் வேளையில் எவ் நாடுகளில் சாட்சிகளாய் இருப்பீர்கள் என திருத்தூதர்களுக்கு கூறினார்?
   எருசலேம்,யூதேயா,சமாரியா
4. தூய ஆவியின் வல்லமையைப் பெற்ற திருத்தூதர் ஆற்றிய பணிகளில் இரண்டு தருக?
   - இயேசுவின் உயிர்ப்பிற்கு சான்று பகிர்தல்.

- ➢ வல்லமையுடன் போதித்தல்

5. தூய ஆவியின் வல்லமை எப்போது திருத்தூதர்களுக்கு வழங்கப்பட்டது?
   பெந்தகோஸ்து நாளில்
6. பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த மனிதன் எங்கு இருந்தான்?
   கோவிலின் அழகு வாயிலில்
7. இயேசு விண்ணேற்றம் அடையும் வேளையில் திருத்தூதர்களுக்கு அளிக்கப்பட்ட பணி யாது?
   "உலகின் கடைசி எல்லை வரை எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்"
8. திருத்தூதர்கள் செய்த முதலாவது அற்புதம் யாது?
   கால் ஊனமுற்றுவரைக் குணப்படுத்தியமை

## சவால்களின் மத்தியில் நற்செய்திப் பரம்பல் - அலகு 09

1. திருத்தூதர்கள் எவற்றை பாக்கியமாக கருதினார்கள்?
   - ➢ எச்சரிக்கைகள்
   - ➢ நிந்தனைகள்
   - ➢ அவமதிப்புகள்
   - ➢ உடல் வேதனைகள்
2. திருத்தூதர்கள் எதற்கு முதலிடம் கொடுத்து செயற்பட்டனர்?
   இறைசெயல்களுக்கு
3. தூய ஆவியால் இயேசுவின் வல்லமையைப் பெற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?
   - ➢ இறைவேண்டுதல் செய்தல்
   - ➢ சான்று பகர்தல்
4. இயேசுவின் உயிர்ப்பால் புது வாழ்வு ஏற்படும் என திருத்தூதர்கள் போதித்ததை மறுத்தவர்கள் யார்?
   தலைமைக்குருவும், சதுசேயரும்
5. "நீங்கள் எந்த வல்லமையால் அதைச் செய்கிறீர்கள்" என திருத்தூதர்களை கேட்ட பொழுது அவர்கள் கூறிய பதில் யாது?
   தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு செய்கிறோம் என கூறினார்கள்
6. இயேசுவின் தியாகத்தால் உருவாகிய பணியை எடுத்துச் செல்லும் பணி யாரிடம் ஒப்படைக்கப்பட்டது?
   திருத்தூதர்களிடம்

## தூய ஆவியின் வல்லமையால் உயிர் பெறுதல் (தொற்காள்) - அலகு 10

1) தொற்காள் எங்கு வசித்தாள்?
   யோப்பாவில்
2) தொற்காவின் மறு பெயர் என்ன?
   தபீத்தா

3) பேதுரு தபீத்தாவை நோக்கி கூறியது யாது?
"தபீத்தா எழுந்திரு"
4) தபீத்தா யாருக்கெல்லாம் உதவி செய்தாள்?
   - ஆதரவற்றோர்
   - கைம்பெண்கள்
   - தேவை உள்ளவர்கள்
5) தொற்கா எனும் பெயரின் பொருள் யாது?
பெண்மான்
6) பேதுருவை சீடர்கள் எங்கு சென்று அழைத்தனர்?
யோப்பாவுக்கு அருகிலுள்ள லித்தா எனும் ஊரில்
7) தபீத்தாள் செய்த உதவி ஒன்றினைக் குறிப்பிடுக?
வறியவர்களுக்கு ஆடைகளை தைத்துக்கொடுத்தாள்
8) பேதுரு தபீத்தாளை எவ்வாறு உயிர்ப்பித்தார்? முழந்தாள் படியிட்டு இறைவனிடம் மன்றாடி தூய ஆவியால் நிரப்பப்பட்டு அவளுடைய கையைப் பிடித்து எழுந்து நிற்கச் செய்தார்

## தூய ஆவியின் வல்லமையால் ஸ்தேவான் மரணத்திற்கு முகம் கொடுத்தல்-

## அலகு 11

1) திருச்சபை எப்போது ஆரம்பமானது?
பாலஸ்தீன தேசம் உரோம ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில்
2) ஆதி திருச்சபையானதுமுகம் கொடுத்த துன்பங்களில்இரண்டு தருக?
1.கிறிஸ்தவர்கள் யூத சட்டங்களை அவமதிப்பவர்களாக கருதப்பட்டனர்
2.கிறிஸ்துவின் பெயரால் சான்றுபகர்வதை தடை செய்தனர்
3) திருச்சபைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு கொலைசெய்யப்பட்டவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
மறை சாட்சிகள்
4) கிறிஸ்தவ சபைக்காக முதலாவதாக தனது உயிரை அர்ப்பணித்த மறை சாட்சி யார்? ஸ்தேவான்
5) திருத்தொண்டர்கள் எத்தனை பேர்?
7 பேர்
6) திருத்தொண்டர்களின் பணிகள் எவை?
1.திருச்சபையின் உதவிகள்
2.பந்தி பகிர்ந்தளிப்பு
3.நலன்புரி பணிகள்
7) பிரதானமான திருத்தொண்டர் யார்?
ஸ்தேவான்
8) ஸ்தேவானிடம் காணப்பட்ட விசேட பண்புகளில் இரண்டு தருக?
1.பொதுவாக அனைவராலும் நல்லவராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்
2.ஞானத்தோடு செயற்பட்டவர்
9) திருத்தூதர்பணி 7:54-60 இல் தூயஆவியினால் வல்லமையடைந்த ஸ்தேவான் பற்றிக்கூறும் விடயங்களில் இரண்டு தருக?
1.பயமின்றி ஆளுகை ஆற்றினார்
2.கடவுளின் மகிமையை அனுபவித்தார்

10) ஸ்தேவான் மூலமாக எமது வாழ்க்கைக்கு கிடைக்கும் விடயங்கள் இரண்டு தருக?
1.தூய ஆவியின் வழிகாட்டுதலோடு பயணிப்போம்
2.விண்ணரசின் குரலுக்கு செவி சாய்ப்போம்

## தூய ஆவியின் வல்லமையால் சவுலின் துணிவான பணி – அலகு 12

1) கிறிஸ்தவ சபைக்கு யூத மதத்தினால் ஏற்பட்ட தடைகள் இரண்டு தருக?
1.கிறிஸ்தவ சீடர்களை துன்பத்திற்குட்படுத்தினர்
2.கைது செய்து பொதுச்சிறையில் வைத்தனர்
2) கிறிஸ்தவ சபையை இல்லாதொழிக்க மிகவும் கடுமையான அர்ப்பணிப்போடு செயற்பட்ட யூத பரிசேயன் யார்?
சவுல்
3) சவுல் கிறிஸ்தவர்களை கைது செய்ய தமஸ்கு செல்லும் வழியில் இடம் பெற்றவை?
   - இயேசு இவரை சந்தித்தார்.
   - இயேசுவின் குரலைக் கேட்டார்
4) தூய ஆவியின் வல்லமையையும் துணிவையும் பெறும் போது எமக்கு கிடைக்கும் வாய்ப்புகள் எவை?
1.மனப்பூர்வமாக இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கும்
2.இறைவனுக்குள்ளே உறுதியாய் நிலைத்திருப்பதற்கும்
5) ஸ்தேவானுக்கு கல்லெறிந்த வாலிபர்களின் உடைகளைப் பாதுகாத்து வைத்திருந்தவர் யார்?
சவுல்

## இறைவனுடன் நல்வாழ்வு – அலகு 13

1) ஊனியல்பின் செயல்களில் மூன்று தருக?
   - கெட்ட நடத்தை
   - குடிவெறி
   - காமவெறி
2) மது அருந்தும் ஒருவர் எதிர்நோக்கும் விடயங்கள் எவை?
பணத்தை வீண்விரயம் செய்வார்.
பலவிதமான நோய்களால் அல்லல் படுவார்
3) நீதிமொழிகள்2:5-7 இவ்வார்த்தையின் படி நாம் நடக்கவேண்டிய முறைகள்.
1.திட்டமிட்டு ஊக்கத்துடன் உழைத்தல்.
2.நேர்மையை நிலைநாட்டி வாழ்வது.
4) ஒழுக்காற்றல் நிறைந்த நல்வாழ்வு மூலம் எமக்கு இறைவனால் கிடைப்பது?
   - கருணை
   - ஆறுதல்
   - முன்னேற்றம்
5) வாலிப வயதில் இறையரசின் பணிக்காக எதனை செலவிடுவோம்?
   - எமது உழைப்பு

- நேரம்
- செல்வம்
- அறிவு

## இறைவனுடன் நல்நோக்கு – அலகு 14

1) நீதிமொழிகள் 2:6-10 இல் ஞானம் பற்றி கூறும் இரு விடயங்கள் எவை?
   ஞானம் இறைவனின் கொடை,அறிவு
2) கிறிஸ்தவ பிள்ளைகளாகிய நாம் எவற்றை மனதில் கொள்வோம்?
   1.எமது உடலைக் கட்டுப்படுத்துவோம்
   2.எமது மனதை தூய்மையாக வைத்துக்கொள்வோம்
3) இறைவனின் கொடையாக காணப்படுவது எது?
   ஞானம்
4) ஒலி,ஒளி ஊடகங்கள் 02 தருக?
   - தொலைக்காட்சி
   - கணணி
5) இன்றைய உலகில் இணையம் பங்கு வகிக்கும் துறைகள் 02 குறிப்பிடுக?
   - மருத்துவம்
   - போக்குவரத்து

## இறைவனுடன் நல்லுறவு– அலகு 15

1) இறைபடைப்பில் மிகவும் உயர்ந்த படைப்பாக கூறப்படும் படைப்பு எது?
   மனிதப்படைப்பு
2) இறைவார்த்தை மனிதப்படைப்பை எவ்வாறு குறிப்பிடுகின்றது?
   தூய ஆவியின் கோவில் என்று
3) 1கொரிந்தியர் 6இன் படி எமது உடலின் உரிமை யாருக்கு உரியது?
   கடவுளுக்கு
4) தூய ஆவியின் ஆலயமான நம்மில் அவர் வாசமாய் இருக்கின்றார் என்பதை எவ்வாறு பிறருக்கு வெளிப்படுத்த வேண்டும்?
   - சிந்தனைகள்
   - வார்த்தைகள்
   - நடத்தைகள் போன்றவற்றை கடவுளுக்கு ஏற்றதாக இருப்பதன் மூலம்.
5) இறைசாயலை எமது வாழ்வின் பிறரும் அனுபவிக்க வேண்டுமானால் எம்மிடம் காணப்பட வேண்டிய குணவியல்புகள் எவை?

- தாழ்மை
- பயபக்தி
- தூய்மை
- நேர்மை
- அன்பு

6) குடும்பத்தின் தீய பழக்கங்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் 05 தருக?
   - குடும்பத்தில் குழப்பம் ஏற்படுகின்றது.
   - கூட்டுக்குடும்பம் உடைந்து போகின்றது.
   - குடும்பத்தில் பிரிவு அதிகரிக்கின்றது.
   - பிள்ளைகள் தனித்து விடப்படுகின்றார்கள்.
   -
   - கடவுளின் நியாயத்தீர்ப்பிற்கு உட்படுதல்

## இறைவார்த்தை வாழ்வின் அடிப்படை – அலகு 16

1) இறைவன் மனிதனுக்கு வெளிப்படுத்தும் பிரதான வழி என்ன?
   இறைவார்த்தை
2) இறைவார்த்தையை நாம் சரியாக விளங்கிக்கொள்ள வழிகாட்டியவர்கள் யாவர்? 4தருக?
   - குருவானவர்
   - பாடசாலை ஆசிரியர்
   - பெற்றோர்
   - பெரியோர்
3) "என் காலடிக்கு ……………… விளக்கு என் பாதைக்கு ஒளியும் அதுவே இடைவெளியில் வர வேண்டியது?
   உம் வாக்கே
4) இறைவார்த்தை எவ்வாறு வழிகாட்டுகின்றது?
   1.தவறை உணரச் செய்கின்றது
   2.எம்மைத் தைரியப்படுத்துகின்றது
   3.இறைகட்டளையைக் கற்பிக்கின்றது
   4.அன்பைத் தருகின்றது
5) நிலையான சந்தோசத்திற்கு உரிமையாளர் யார்?
   இறை வார்த்தை மூலம் வாழ்பவர்
6) இறை வார்த்தையின் மூலம் உம்மை சுற்றியுள்ளவர்கள் மத்தியில் எவ்வாறான பணியாற்றுவீர்?
   1.பிறரின் வாழ்வை நல்வழியில் இட்டுச் செல்ல வழிப்படுத்துதல்
   2.ஆபத்துக்களினால் பாதிக்கப்பட்டோரை தைரியப்படுத்துதல்
   3.நல்வழியின் மூலமாக பகைவரை தோல்வியுறச் செய்தல்

## இறைவார்த்தை வாழ்வின் அடைக்கலமும் பெலனும் – அலகு 17

1. அன்றாட வாழ்க்கையில் மனிதர்கள் முகம் கொடுக்கும் துன்பங்கள் பற்றிய பத்திரிகைத் தகவல்கள் எவை?
   1.அதிக வரட்சியினால் கடும் பாதிப்பு
   2.புற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு
   3.மண்சரிவினால் பல வீடுகள் அழிவு
2. பலவிதமான துன்பங்கள் மனிதனுக்கு எவ்வகையான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது?
   1.உடல் ரீதியான துன்பம்
   2.மன ரீதியான துன்பங்கள்

3. உடல்,மன ரீதியாக ஏற்படும் துன்பங்களை அடையாளம் கண்டு கொள்ளும் முறைகள் 03 தருக?
   1.அதிர்ச்சிக்கும் பயத்திற்கும் உட்படுதல்
   2.வருங்காலத்தின் எதிர்பார்ப்பு இல்லாமல் போதல்
   3.ஆன்மீக வாழ்வு உடைந்து போதல்
4. இஸ்ரயேல் மக்கள் எப்போது இறைவனுடைய இரக்கத்தையும் உதவியையும் நாடினார்கள்?
   1.எகிப்தில் அடிமைகளாக இருந்த போது
   2.பாபிலோனியாவிற்கு நாடு கடத்தப்பட்ட போது
5. இஸ்ரயேல் மக்கள் வெற்றியை நோக்கி கொண்டு செல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் காட்டிய நம்பிக்கையின் வெளிப்பாடுகள் 03 தருக?
   1.என் அடைக்கலமும் பெல னுமாகின்றார்.
   2.இருளின் மத்தியில் எமது பயத்தைப் போக்குகின்றார்.
   3.வெற்றியை நோக்கி எம்மை வழிநடத்துகின்றார்
6. கடவுள் எமக்கு அடைக்கலமும் பெலனுமான சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?
   1.எதிர்பார்ப்பு உடைந்து போகும் போது
   2.போட்டியில் தோல்வியுற்ற போது
7. கடவுள் எம்மை பாதுகாக்கும் சந்தர்ப்பங்கள் 03 தருக?
   1.இயற்கை அனர்த்தம்
   2.திடீர் விபத்தின் போது
   3.போர்த் துன்பங்களின் போது
8. கடவுள் இருளின் மத்தியில் எமது பாவத்தைப் போக்கும் சந்தர்ப்பங்கள் 03 தருக?
   1.நோய்கள் ஏற்படல்
   2.பகைவரின் தொல்லை
   3.எமக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டு
9. கடவுள் வெற்றியை நோக்கி எம்மை நடத்தும் சந்தர்ப்பம் 02 தருக?
   1.கல்வியின் இலக்கு
   2.தொழிலைப்பற்றிய வருங்கால எதிர்பார்ப்பு
10. பிறரோடு ஒன்றிணைந்து வாழ்வதற்கும் அவர்களின் வாழ்வைக் கட்டியெழுப்ப நீர் எவ்வாறு செயற்படுவீர் 03 தருக?
    1.ஒவ்வொருவரின் தேவைகளை அறிந்து கொண்டு அதற்கு ஏற்ப அவர்களுக்கு உதவி செய்தல்.
    2.மனதளவில் பாதிக்கப்பட்டவர்களை அந்நிலையிலிருந்து மீட்டு எடுப்பதற்கு செயற்படுவோம்.
    3.வாழ்வை வெற்றி கொள்வதற்கு அவர்களைத் தைரியப்படுத்துவோம்

**தன்னலம் துறந்து சிலுவை சுமப்போம் - அலகு 18**

1. எமது நாட்டின் கல்வி திட்டத்திற்காக பாரிய பணியாற்றிய போதகர் யார்?
   வண.ஜேம்ஸ்.H.டொல் போதகர்
2. இவர் எத்தனையாம் ஆண்டு பிறந்தார்?
   1872.06.09
3. இவர் எந்த பல்கலைக்கழகத்தில் எந்த துறையில் உயர்ந்த திறமை பெற்றார்?
   கேம்பிறிஜ் பல்கலைக்கழகம் கணித பாடம் தொடர்பான துறையில்
4. இலங்கைக்கு இவர் எத்தனையாம் ஆண்டு வந்தார்? எங்கே பணியாற்றினார்?
   1896 காலியில் உள்ள ரிச்மன்ட் கல்லூரியில் அதிபராக பணியாற்றினார்.
5. இவரை எத்தனையாம் ஆண்டு கடுமையான காய்ச்சல் தாக்கியது?
   1906ம் ஆண்டு
6. எத்தனையாம் ஆண்டு இவர் மரணமடைந்தார்?
   1906.07.12
7. இயேசுவைப் பின்பற்றுபவர்களிடம் இருக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் 02 தருக?
   1.தன்னலம் அகற்றுதல்
   2.சிலுவையை சுமந்து அவர் பின்னால் செல்லுதல்
8. தன்னலம் அகற்றுதல் என்றால் என்ன?
   தன்னிடம் இருக்கும் தான் என்ற அகந்தையை அகற்றி விடுதல் ஆகும்
9. யூத சமூகத்தில் பாரதூரமான குற்றம் புரிவோருக்கு வழங்கப்படும் தண்டனை என்ன?
   சிலுவையில் அறைதல் ஆகும்.
10. அன்று யூத சமூகத்தில் மக்களை துன்பத்திற்கு உட்படுத்தினவர்கள் யாவர்?
    1.குருக்கள்
    2.பிரபுக்கள்
    3.ஆட்சியாளர்கள்
11. நாம் இறை பிள்ளைகள் என்ற தகுதியையும் பாவ மன்னிப்பையும் எதனால் பெற்றுள்ளோம்?
    இயேசுவின் சிலுவை மரணத்தினால்
12. சிலுவையை சுமந்து அவர் பின்னால் செல்வது என்றால் என்ன?
    இயேசுவின் வாழ்வின் முன்மாதிரியைப் பின்பற்றுவதாகும்.
13. மனிதன் எப்போது உயிர் உள்ளவனானான்?
    நாசிகளில் அவர் உயிர்மூச்சை ஊதும் போது
14. ஆன்மீக வாழ்வை போசிப்பதற்காக என்ன செய்ய வேண்டும்?
    இறை திட்டத்திற்கு இடமளிக்க வேண்டும்
15. தன்னலம் துறந்து இயேசுவைப் பின்பற்றுகின்றவராக எமது வாழ்வை கொண்டு செல்ல இருக்க வேண்டிய பண்புகள் 03 தருக?
    1.எமது விருப்புகளுக்கும் தேவைகளுக்கும் மேலாக பிறரின் விருப்புகளுக்கும் தேவைகளுக்கும் முதலிடம் அளிக்க வேண்டும்.
    2.நாம் செய்யும் அனைத்து செயல்களிலும் முழுமையாக அர்ப்பணித்து நிறைவு செய்வோம்.
    3.வாழ்வின் அனைத்து சவால்களிலும் திடமாக நின்று இயேசுவைப் பின்பற்றுவோம்

## கிறிஸ்துவின் படைவீரர் ஆவோம் - அலகு 19

1. கிறிஸ்தவர்களாக வாழும் போது முக்கிய சவால் யாரிடமிருந்து வருகிறது?
   தீயோனிடம்

2. தீயோனால் வரும் சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்கும் வழி முறைகளை பவுல் எந்த நிருபத்தில் கூறினார்?
   எபேசியர்
3. பவுல் போராயுதங்களை அடையாளப்படுத்தி எதற்காக இறை மக்களை ஆயத்தம் செய்தார்?
   ஆன்மீகப் போராட்டத்திற்காக
4. இன்று சமுதாயத்தினால் வரும் தீய சக்திகளின் வடிவங்கள் 03 தருக?
   1.நவீன தொடர்பு சாதனங்களை தவறாக பயன்படுத்துதல்
   2.போதைப் பொருட்கள் புகைப்பிடித்தல் போன்றவற்றின் தூண்டுதல்
   3.சில நண்பர்கள் மூலமாக வரும் தவறான தூண்டுதல்
5. பவுலடியார் கூறுகின்ற படி இறை மக்களின் போராயுதங்கள் எவை?
   1.உண்மை எனும்- இடைக்கச்சை
   2.நீதி எனும் - மார்புக்கவசம்
   3.மீட்பு எனும் - தலைச்சீரா
   4.தூய ஆவி அருளும் கடவுளின் வார்த்தை எனும் - வாள்
   5.அமைதி அருளும் நற்செய்தி எனும் - மிதியடி
   6.நம்பிக்கை எனும் - கேடயம்
6. படைவீரனிடம் இருக்கவேண்டிய முக்கியமான பண்பு என்ன?
   ஜெபித்தல்
7. படைவீரருக்கு கொடுக்கப்பட்ட மன்றாட்டைக் குறித்து எபிரேயருக்கு கொடுக்கப்பட்ட அறிவுரை 03 தருக?
   1.முழு மனதோடு மன்றாடல்
   2.விழிப்பாயிருந்து இடைவிடாமல் மன்றாடுதல்
   3.இறை பணியில் ஈடுபடுவோருக்காக மன்றாடுதல்

## கிறிஸ்தவ கொள்கையைப் பாதுகாப்போம் - அலகு 20

1. கிறிஸ்தவ வாழ்வில் பின்பற்ற வேண்டிய கொள்கைகளை தூய பவுல் எந்த நிருபத்தில் எழுதி வைத்தார்?
   உரோமையருக்கு எழுதிய நிருபத்தில்
2. கடவுள் எமக்களித்த கட்டளைகளின் இரு பிரிவுகளும் எவை?
   1.நல்ல ஒரு இறைத் தொடர்புக்காக நடைமுறைப்படுத்த வேண்டிய கொள்கை
   2.நல்ல ஒரு சமுதாய தொடர்புக்காக நடைமுறைப்படுத்த வேண்டிய கொள்கை
3. நாம் கடவுளுக்கு சான்று பகருவதற்கு சாதகமாக அமையும் இடங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக?
   - எமது இல்லம்
   - பாடசாலை
   - சமூகம்
4. அன்பின் பெரிய அடையாளமாக கருதப்படுவது எது?
   அன்பின் நிமித்தம் பலவற்றை இழந்தாலும் அதை தாங்கிக்கொள்ளுதல்
5. இறைவனுக்குப் பணிபுரிதல் பற்றி உரோமையர் நூல் குறிப்பிடும் கருத்து யாது?
   விடா முயற்சியோடும் ஆர்வமிக்க உள்ளத்தோடும் ஆண்டவருக்குப் பணி புரியுங்கள்.
6. திருவிவிலியம் தீமையை வெல்வதற்கு எதனைப் பயன்படுத்தக் கூறுகின்றது?
   தீமையை நன்மையினால் வெல்லக்கூறுகின்றது.

7. எமது துன்ப வேளையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று திருவிவிலியம் எமக்கு கற்பிக்கின்றது?
   இறைவன் மீது நம்பிக்கை கொண்டு பொறுமையோடு செயல் படுவோம்.
8. உரோமர் 12:10 கூறுவது யாது?
   உடன் பிறப்புக்கள் போன்று ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுங்கள். பிறர் உங்களை விட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள்.
9. உரோமர் 12:16 எமக்கு கற்பிப்பது யாது?
   நாம் எம்மையே அறிவாளிகள் என எண்ணி பெருமிதம் கொள்ளக் கூடாது
10. உரோமர் 12:17 எமக்கு கற்பிப்பது யாது?
   நன்மையை சார்ந்து தீமையை தோல்வியுற செய்வோம்

## கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வு – அலகு 21

1. கிறிஸ்தவ வாழ்க்கையானது கடவுளின் பெரிதான இரக்கத்தினால் புதுப்பிக்கப்படுகின்றது எனக் கூறியவர் யார்?
   திருத்தூதர் பவுல்
2. “உங்கள் உள்ளம்…….. பெற்று மாற்றம் அடைவதாக” இடைவெளியில் குறிப்பிட வேண்டியது யாது?
   புதுப்பிக்கப்
3. புதிய வாழ்வை ஆரம்பிப்பவர்களிடம் இருக்க வேண்டிய பண்புகள் 02 தருக?
   1.தம்மைக் குறித்து எவரும் பெருமிதம் கொள்ள கூடாது
   2.கடவுள் கொடுத்த நம்பிக்கையின் படி தூய மனதோடு இருத்தல்
4. மனிதன் தன்னைக் குறித்து உயர்வாக எண்ணும் விடயங்கள் 04 தருக?
   1.தனது தகுதி
   2.தனது ஆற்றல்
   3.தனது அறிவு
   4.தனது செல்வம்
5. கிறிஸ்துவில் புது வாழ்வு ஆரம்பமாவதுற்கு முன் நம் வாழ்வு எதற்கு சமமாக உள்ளது?
   புழுவுக்கு
6. கிறிஸ்துவை அனுபவிப்பதற்கு முன் தமது பாவத்தை உணர்ந்து புது வாழ்வு அவசியம் என்பதை அறிந்து ஆயத்தமாவது எதற்கு ஒப்பிடப்படுகின்றது?
   கூட்டுப்புழுவுக்கு
7. பழைய வாழ்வில் இறைவனுக்கு விருப்பம் இல்லாத செயல்களைக் கைவிட்டு புது வாழ்வு வாழ்பவர்கள் எதற்கு ஒப்பிடப்படுகின்றனர்?
   வண்ணத்துப்பூச்சிக்கு
8. புதிய வாழ்வில் பயணிக்க வேண்டிய பயணப்பாதையினைத் தருக?
   1.கடந்து வந்த இச்சையான வாழ்வைக் குறித்து சிந்தித்தல்
   2.இச்சை நிறைந்த வாழ்விற்காக மனம் வருந்துதல்
   3.பாவ மன்னிப்பு பெறுவதற்கு ஆயத்தமாதல்
   4.சிலுவையின் அடியில் பாவ மன்னிப்பு பெறுதல்
   5.பாவத்தை விட்டு விலகி தூய ஆவியின் வல்லமையால் உறுதியாகுதல்
9. கடவுளின் மூலமாக எமக்கு கிடைக்கும் புதிய சுபாவங்கள் எவை?
   1.நீதி
   2.தூய்மை

10. ஒரு மனிதன் தூய்மையாவதற்கு எவைகளைக் கடவுளுக்கு அர்ப்பணிக்க வேண்டும்?

- உடல்
- உள்ளம்
- ஆன்மா